For Private Circulation Only

# "வள்ளி"

உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய குறித்த செய்தி மடல்

(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

இதழ் - 14

மார்ச் 2024

அகமும் புறமும் தூய்மையாகட்டும் ! அதன்வழி அன்பும் அறமும் தழைத்தோங்கட்டும் !

முனைவர். ப. சத்தியநாராயணன்
நிறுவனர் – அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

## "வள்ளி ஆரோக்கிய தூதர்களுக்கான" - சமூக சுகாதாரம் மற்றும் முதலுதவி - விழிப்புணர்வு கருத்தரங்கம்

புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் **"வள்ளி ஆரோக்கிய தூதர்களுக்கான" சமூக சுகாதாரம் மற்றும் முதலுதவி** – விழிப்புணர்வு கருத்தரங்கம் செங்கல்பட்டு, பொத்தேரியில் உள்ள எஸ்.ஆர்.எம். மருத்துவமனை செமினார் அரங்கில் மார்ச் 2.3.2024 அன்று நடைபெற்றது. அறக்கட்டளையின் பொதுமேலாளர் ச.சுரேஷ்கண்ணன் தனது வரவேற்புரையில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஏழு திட்டங்களை பற்றி அனைவருக்கும் விரிவாக எடுத்துரைத்து சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.



அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வெங்கடகிரி அவர்கள் பேசுகையில் "புதிய தலைமுறை அறக்கட்டளை நடத்தும் வள்ளி ஆரோக்கிய தூதுவர்களுக்கான கருத்தரங்கம் டாக்டர். என். நளினி ஜெயந்தி அவர்களின் வழிகாட்டுதலாலும், வள்ளி ஆரோக்கிய தூதர்களின் அர்ப்பணிப்பாலும் இங்கே நடைபெறுகிறது என்று கூறினார்."

டாக்டர். என். நளினி ஜெயந்தி, துறைத்தலைவர், நுரையீரல் துறை அவர்கள் தொடக்க உரையாற்றிப் பேசுகையில், நமது நுரையியீரலைப் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் பேசுகையில் தினமும் நாம் மூச்சுப் பயிற்சி எடுக்க வேண்டும் என்றும், ஆரோக்கிய வாழ்விற்கு நல்ல தரமான உணவு, தண்ணீர் அவசியம் என்றும் அறிவுறுத்தி தனது உரையை முடித்துக் கொண்டார்.

மறைமலை நகரில் உள்ள ஆம்பெனால் ஆம்னி கனெக்ட் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் திருமதி. கே.கவிதா அவர்கள் பேசுகையில் "எனது நிறுவனத்தில் 2500க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள், நாங்கள் அவர்களின் ஆரோக்கியம், உடைமைகள், உடல்நலம் அனைத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறோம். முதலுதவி என்பது மிகவும் முக்கியமானது, இதை பற்றி அனைவருமே தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதற்கு தனியாக படித்து இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை" என்றும் கூறினார். சிறப்பு விருந்தினர் ஏ.அகமது, பயிற்சியாளர், விபத்து மற்றும் அவசர சிகிச்சை தொழில்நுட்பத்துறை, எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, பொத்தேரி, அவர்கள் பேசுகையில், ஒருவருக்கு


டாக்டர். என். நளினி ஜெயந்தி


து.வே.வெங்கடகிரி


கே.கவிதா


எம். சந்திரபாபு


ஏ. அகமது

மாரடைப்பு வந்துவிட்டால் அவருக்கு எவ்வாறு மூச்சு சுவாசத்தை கொடுக்க வேண்டும், சர்க்கரை நோயாளி மற்றும் இதய நோயாளிகள் திடீரென்று மயங்கி விட்டால் அவர்களுக்கு எப்படி வாய் மூலமாக சுவாசத்தை கொடுக்க வேண்டும் என்றும் ஒரு பொம்மையை வைத்து செய்து செயல்முறை மூலம் விளக்கம் அளித்தார்.

- **ஒருவருக்கு தீவிபத்து ஏற்பட்டால் ஈரமான கோணிப்பையை வைத்து தீயை அனைக்க முயல வேண்டும்.**
- **ஒருவர் மயக்கமடைந்து விட்டால் அவர்களுக்கு முதலில் வாய்வழியாக சுவாசத்தை அளிக்க வேண்டும். !**

சிறப்பு விருந்தினர் எம். சந்திரபாபு, தீ தடுப்பு பாதுகாப்பு அதிகாரி, எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, பொத்தேரி, அவர்கள் பேசுகையில், நீர் நிலம், நெருப்பு, வாயு, காற்று என்று பஞ்சபூதங்களை பற்றியும், தீயினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கூறினார். ஒருவருக்கு திடீரென்று தீக்காயம் ஏற்பட்டால் அவர் மேல் தண்ணீரை ஊற்றாமல், சாக்குபையை வைத்து எப்படி தீயை அணைக்க வேண்டும், தீயணைப்பான் கருவி மூலம் தீயை அனைக்கும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 31 நபர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## "மருத்துவ மாணவரின் அனுபவங்கள்"


எஸ்.பரத்

என் பெயர் எஸ். பரத் சென்னை, முகப்பேரில் வசித்து வருகிறேன், எனக்கு மருத்துவதுறை மிகவும் பிடித்தமான ஒரு துறை. 2018 ஆம் ஆண்டு, மருத்துவக் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பிற்குப் பெயர் பெற்ற எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தது எனக்குள் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியது. அதிநவீன வசதிகள் முதல் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் வரை, எஸ்.ஆர்.எம் மருத்துவக் கல்லூரியில் எனது பயணத்தின் ஒவ்வொரு அம்சமும் என் எதிர்கால இலட்சியத்திற்கு வலு சேர்ப்பதாய் அமைந்தது. முறையான பாடத்திட்டம், மருத்துவப் பேராசிரியர்களின் வழிகாட்டுதல்கள் ஆகியவை மருத்துவத் துறையின் சிக்கல்களை வழிநடத்தத் தேவையான அறிவு மற்றும்


சி.எஸ்.அரவிந்த்

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த C.S.அரவிந்த் எனும் நான் எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த சமூக மருத்துவத் துறையில் பயிற்சி மருத்துவராக இருந்த காலத்தில் பலதரப்பட்ட சமூகத்திற்கு சேவை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. மக்களின் அன்றாட வாழ்வில் சுகாதாரத்தின் ஆழமான தாக்கத்தை உணர்ந்து அவர்களுக்கு அதை நேரடியாக விளக்கும் பணி எனக்கு கிடைத்தது. இந்த அனுபவம் என்னை பண்பட்ட நல்ல மருத்துவனாக உருவாக்கியது. மேலும் சமூகத்தின் நல்வாழ்வுக்கு பங்களிக்கும் வாய்ப்பிற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

# "மருத்துவ மாணவரின் அனுபவங்கள்"

**எஸ்.பரத்**

திறன்களை எனக்கு அளித்தது. ஒட்டுமொத்தமாக, எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரியில் எனது நேரம் விலைமதிப்பற்றது, உலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தத் தயாராக உள்ள ஒரு திறமையான மற்றும் இரக்கமுள்ள சுகாதாரப் பயிற்சியாளராக என்னை வடிவமைத்துள்ளது.

ஒரு நல்ல மருத்துவராக இந்த சமூகத்திற்கு என்னால் முடிந்த சேவையை கண்டிப்பாக வழங்குவேன். என்னை உருவாக்கிய மருத்துப்பேராசிரியர்கள் மற்றும் எஸ்.ஆர்.எம். மருத்துவமனை நிர்வாகத்திற்கும் என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சி.எஸ்.அரவிந்த்**

எனது இன்டர்ன்ஷிப்பின் காலம் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று. மருத்துவமனையின் உள்நோயாளிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் பணியினை நான் என் மூத்த பேராசிரியர்களுடன் இணைந்து செய்து வந்தேன்.

கிராமப்புறங்களில் சுகாதார பரிசோதனை முகாம்கள் நடத்தியதன் மூலம் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அவர்களுக்கு வழக்கமான பரிசோதனைகள் முதல் நாள்பட்ட நிலைமைகளை கண்டறிதல், அதற்கு தீர்வு காணுதல் போன்றவை எனது மருத்துவ அறிவுத்திறனை பட்டைதீட்டி நான் ஒரு சிறந்த மருத்துவனாக என்னுள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

# "சுவாமி விவேகானந்தர்" - இரத்த தான முகாம் - 20.02.2024



டாக்டர். ஆர். ராஜ்பரத்

புதிய தலைமுறை அறக்கட்டளையின் வள்ளியம்மை அம்மாள் கிரமப்புற மருத்துவ உதவித்திட்டம் மற்றும் எஸ்.ஆர்.எம். மருத்துவமனை இரத்த வங்கியும் இணைந்து பொத்தேரியில் உள்ள எஸ்.ஆர்.எம். டெக்னாலஜீஸ் அலுவலக வளாகத்தில் பிப்ரவரி 20, 2024 செவ்வாய்கிழமை அன்று சுவாமி விவேகானந்தர் புதிய தலைமுறை அறக்கட்டளை – இரத்ததான முகாமினை நடத்தியது.

**டாக்டர். ஆர். ராஜ்பரத்,** எம்.டி., (இரத்தமாற்ற மருத்துவம்) பிஎச்.டி, இரத்தமாற்ற மருத்துவத்துறை, இரத்த வங்கி), எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், பொத்தேரி அவர்கள், இந்த ரத்ததான முகாமை தொடங்கி வைத்துப் பேசுகையில் "**இரத்த தானம் என்பது சமுதாயத்திற்கு இன்று தேவைப்படும் ஒரு உன்னதமான செயலாகும், ஏனெனில் தானம் செய்யப்பட்ட இரத்தம் தேவைப்படும் நபர்களின் உயிரைக்காக்கும். உலகளவில், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 80 மில்லியன் யூனிட் இரத்தம் தானமாக வழங்கப்படுகிறது. இரத்த தானம் என்பது தேவையில் உள்ள சிலருக்கு உதவுவது மட்டுமல்ல, நன்கொடையாளர்களின் ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும் ஒரு நடைமுறையாகும். 6மாதங்களுக்கு ஒரு முறையாவது இரத்ததானம் செய்வது ஆரோக்கியமானது என்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன**" என்று கூறினார்.



புதிய தலைமுறை அறக்கட்டளையின் பொது மேலாளர், ச.சுரேஷ்கண்ணன் அறக்கட்டளையின் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். கே.வி. வசந்தகுமார், மூத்த நிர்வாகி, எஸ்.ஆர்.எம். டெக்னாலஜீஸ், பொத்தேரி அவர்கள் சிறப்புரையில், புதிய தலைமுறை அறக்கட்டளை முதல் முறையாக இந்த நிகழ்ச்சி இங்கு செய்து உள்ளார்கள். இது எஸ்.ஆர்.எம். டெக்னாலஜி பணியாளர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. இதைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாகவும் எங்களுக்கு இருந்தது, மேலும் இது போல் மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் கூறினார். இந்த இரத்ததான முகாமில் மொத்தம் 42 நபர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமில் 38 நபர்கள் இரத்த தானம் செய்தார்கள். இதில் மொத்தம் 24 யூனிட் இரத்தம் பெறப்பட்டுள்ளது. இந்த முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு குளிர்பானம் மற்றும் பிஸ்கட்கள் வழங்கப்பட்டன. மேலும், அவர்களுக்கு எஸ்.ஆர்.மருத்துவமனை ரத்த வங்கியின் சார்பில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அறக்கட்டளையின் சார்பில் ரமேஷ் கண்ணன், திட்ட மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை ஆகியோர் இந்த இரத்த தான முகாமினை ஒருங்கிணைத்து நடத்தினார்.

# வள்ளி மருத்துவ முகாம் மற்றும் வள்ளி ஆங்கில செய்தி மடல் வெளியீடு



எஸ். பிரகாஷ்




ஜனவரி 25, 2024 அன்று SRM மருத்துவமனையில் புதிய தலைமுறை அறக்கட்டளை சார்பில் மருத்துவ முகாம் நடைபெற்றது. மறைமலை நகரைச் சேர்ந்த வின்னரசி டிராவல் ஏஜென்சியின் உரிமையாளர் எஸ். பிரகாஷ் அவர்கள் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். இம்முகாமில் வள்ளி ஆங்கில செய்தி மடல் 7வது பதிப்பினை டாக்டர். சந்திரசேகர் (SRM குளோபல் மருத்துவமனை) அவர்கள் வெளியிட, SRM மருத்துவமனையின் பொது மேலாளர் எம்.தினகரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் துவே.வேங்கடகிரி அவர்கள் தலைமை தாங்கினார். இம்மருத்துவ முகாமில் மொத்தம் 52 பொது மக்கள் கலந்துக்கொண்டனர். முகாமில் கலந்துக்கொண்ட வர்களில் 4 நபர்கள் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர். கலந்துக்கொண்டவர்களுக்கு பிஸ்கட், தண்ணீர் பாட்டில், கூல்டிரீங்ஸ் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு, பொது மருத்துவம், இசிஜி, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற பரிசோதனைகள் பார்க்கப்பட்டு இலவசமாக மருத்துகளும் வழங்கப்பட்டது. முகாம் முடிந்தவுடன் அவர்களுடைய கிராமங்களுக்கு SRM மருத்துவமனை பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவ முகாமினை அறக்கட்டளையின் திட்ட மேலாளர்கள் ஏ.ஆர். ரமேஷ் கண்ணன் மற்றும் ஈ.மணிராஜ் ஆகியோர் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்தனர்.

# “மன நலத்தை மேம்படுத்தும் எளிய முறைகள்”



டாக்டர். பாசி சுகுமாறன்
பேராசிரியர் & துறைத்தலைவர்
மருத்துவ உளவியல் துறை
எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, பொத்தேரி

காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்..எம். மருத்துவமனையில் மருத்துவ உளவியல் துறை, 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது இது இளங்களை மருத்துவ உளவியல் (B.Sc Clinical Psychology) முதுகலை மருத்துவ உளவியல் (M.Sc Clinical Psychology) ஆய்வியல் மருத்துவ உளவியல் (M.Phil. Clinical psychology) போன்ற பாடத் திட்டங்களையும் வழங்கி வருகிறது. இந்த துறையில் ஒரு பேராசிரியர், இரண்டு இணை பேராசிரியர் மற்றும் ஏழு உதவி பேராசிரியர்கள் என ஒரு குழுவாக செயல் படுகின்றனர்.



டாக்டர் Lt. Col. அ. ரவிக்குமார்
சார்பு துணைவேந்தர்,
SRM மருத்துவ
சுகாதார அறிவியல் துறை, பொத்தேரி



டாக்டர். T. மைதிலி
கூடுதல் பதிவாளர்
எஸ்.ஆர்.எம். மருத்துவ சுகாதார
அறிவியல் கல்லூரி, பொத்தேரி



டாக்டர். நிதின் என். நகர்கர்
டீன் (மெடிக்கல்),
SRM மருத்துவ கல்லூரி
மற்றும் அறிவியல் துறை
ஆராய்ச்சி மையம், பொத்தேரி



டாக்டர். ஆர். வெங்கட்ராமன்
மருத்துவக் கண்காணிப்பாளர்
SRM மருத்துவக் கல்லூரி,
பொத்தேரி

### இத்துறையில் வழங்கப்படும் சேவைகள்:

ஒருவருக்கு உடலில் நோய் வருவது போல், மனதிலும் பிரச்சனைகள் நேரிடலாம். இதற்கு ஒருவரின், மனக்கட்டமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த காரணிகளும் காரணங்களாக உள்ளது. இந்த காரணங்களை நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்து, தக்க ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது. இதனை கண்டறிய, பல்வேறு உளவியல் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இங்கு செய்யப்படும் முக்கியமான பரிசோதனைகள்.

1. அறிவு சார் சோதனை (Intellectual Assessment)
2. நடத்தைச் சோதனை (Behavioral Assessment)
3. ஆளுமைச் சோதனை (Personality Assessment)
4. உளவியல் பரிசோதனை (Psychodiagnostic Assessment) - பரிசோதனை, தகுந்த ஆலோசனை மற்றும் சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

> “மனநல பாதிப்பிற்கு சிகிச்சை எடுப்பதில் மக்கள் தயக்கம் காட்டக்கூடாது.”



அறிவாற்றம் பரிசோதனை

### மருத்துவ உளவியல் துறையில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகள்:

1. புலனுணர்வு சார்ந்த நடத்தை சிகிச்சை (Perception -behavioral therapy)
2. நடத்தை மாற்றம் செய்தல் (Behavior Modification)
3. அறிவாற்றல் மேம்பாட்டு பயிற்சி சிகிச்சை (Cognitive Enhancement Therapy)
4. மன அழுத்தம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தகுந்த உளவியல் சிகிச்சை (Psychotherapy)
5. திருமணம் மற்றும் குடும்ப ஆலோசனை (Marriage & family Counselling)
6. குடி மற்றும் போதை நோயாளிகளுக்கு தகுந்த உளவியல் சிகிச்சை (Psychotherapy for alcoholic and drug addicts)
7. மனநோய் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மறுவாழ்வு (Rehabilitation of mentally and physically dis-ordered persons)



உளவியியல் பரிசோதனை





உளவியில் துறை
மருத்துவக் குழுவினர்

இங்கு அனைத்து சேவைகளும் இலவசமாக வழங்கப்படுவதால், பல்வேறு தரப்பட்ட மக்கள் இங்கு பலன் அடைகிறார்கள். மன நலம் காப்பது மிக முக்கியமானது என்றாலும், பல்வேறு காரணங்களால் மக்கள் சிகிச்சைப் பெற தயக்கம் காட்டுகிறார்கள்.

இதனை நீக்க இந்த துறையானது பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. மனநலம் சார்ந்த சேவையை மக்களுக்கு அளிப்பதையும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு இந்த துறையானது மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

# பாராட்டுவோம் ! பரிசளிப்போம்.....!

நவம்பர் 2023 வள்ளி மருத்துவ செய்தி மடலில்
வெளிவந்த வினாடி வினாவில் வெற்றிபெற்றவர்களின் விவரம்
சமூக மருத்துவம் மற்றும் நல்ல ஆரோக்கிய தூதர்கள்


N.K.ராஜா
பெரும்பாக்கம்


P. மணிகண்டன்
S.P. கோவில்


K. ரவீந்திரன்
கோடம்பாக்கம்

## முதலுதவி

### மூச்சுத் திணறல் ஏற்பட்டால் செய்ய வேண்டிய முதலுவி

- மூச்சுத் திணறலால் அவதிப்படுபவரின் பின்னால் நின்று அவரது இடுப்பைச் சுற்றிக் கொள்ளுங்கள்.
- நபரின் விலா எலும்புக்கு அருகில் உங்கள் முஷ்டியை இறுக்கி, உங்கள் மற்றொரு முஷ்டியைப் பிடிக்கவும்.
- இப்போது பிடித்த முஷ்டியை மேல்நோக்கியும் பின்னோக்கியும் வேகமாக இழுக்கவும். மூச்சுத் திணறல் தீரும் வரை அதை மீண்டும் செய்யவும்.
- கர்ப்பிணிப் பெண்களுக்கும் பருமனானவர்களுக்கும் இதே நடைமுறையைச் செய்ய வேண்டாம். அவர்களுக்கு, அடிவயிற்றிற்கு பதிலாக மார்பைச் சுற்றி அழுத்தம் கொடுக்கவும்.

### இரத்தப்போக்கு ஏற்பட்டால் செய்ய வேண்டிய முதலுவி

- உங்கள் காயத்தை தண்ணீரில் கழுவவும்.
- உங்கள் காயத்தை ஒரு பருத்தி துணியால் அல்லது இந்த பணியை செய்யக்கூடிய எதையும் கொண்டு உறுதியாக மூடவும்.
- இரத்தப்போக்கு நிறுத்த அல்லது உறைதலை ஊக்குவிக்க அதன் மீது அதிகபட்ச அழுத்தத்தைப் பயன்படுத்துங்கள். முடிந்தால், காயமடைந்த பகுதியை இதயத்திற்கு மேலே உயர்த்தவும்.
- மூடிய துணி இரத்தத்தால் நனைந்தவுடன், அதை மாற்ற வேண்டாம். அதற்கு பதிலாக, புதிய பொருட்களை கொண்டு பகுதியை மூடவும்.
- இரத்தப்போக்கு நின்றவுடன் காயத்தை ஒரு கட்டு கொண்டு கட்டவும். கட்டுப்பாடற்ற இரத்தப்போக்கு ஏற்பட்டால், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் செல்லவும்.

**வள்ளியம்மை அம்மாள் மருத்துவ உதவித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்**

தொடர்புக்கு

ஏ.ஆர். ரமேஷ் கண்ணன் - 72009 53299 | ஈ. மணிராஜ் - 87544 17400

அச்சிட்டு வெளியிடுபவர்:
து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை

## வள்ளி மருத்துவ பயனாளர் அட்டை


SRM Medical College Hospital & Research Centre Potheri
"வள்ளி"
Patient's Discount Card CGL1000

| Name | J. Bagavathiammal | Female |
|---|---|---|
| Age | XX | Aadhar No 79XXXXXXXXXX |
| Address | 1/5, MIG NH Ramalinga XXXXXXXX Maraimalai Nagar, XXXXXXXXXXX | |
| Mobile | 944XXXXXXX | |

SRM MCH &RC Discount Upto 20% PTF

அன்பான வள்ளி செய்தி மடல் வாசகர்களே வணக்கம் !

வள்ளி மருத்துவ பயனாளர் அட்டையின் மூலம் பொத்தேரி எஸ்.ஆர். எம். மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற்றால் சிகிச்சை கட்டணத்தில் 20 சதவீதம் தள்ளுபடி கிடைக்கும். உங்களுக்கும் வள்ளி பயனாளர் அட்டை வேண்டுமா? கீழ்கண்ட எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**9944544299**

## வாங்க சிரிக்கலாம்

VANGA SIRIKALAM

நோயாளி: டாக்டர் என் பையன் ரொம்ப சோர்வாகவே இருக்கான் என்ன பண்றது டாக்டர்.

டாக்டர்: பையனுக்கு சத்து குறைவா இருக்கு தினமும் பச்சை முட்டை குடுங்க.

நோயாளி: டாக்டர் எங்க வீட்டுல பச்சை இல்ல, வெள்ளை முட்டை தான் இருக்கு.

*******************

நோயாளி: டாக்டர் எனக்கு சுகர் மாத்திரை தானே குடுத்திங்க ?

டாக்டர்: ஆமாம்

நோயாளி: இல்ல டாக்டர், வீட்டுக்குப் போய் சாப்பிட்டு பார்த்தேன் இனிப்பே இல்லை கசப்பாக இருக்கு.